பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 23 வியாழக்கிழமை (08-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 247

# ஆனையிறவு படையினருக்கு உணவு வழங்குவதில் சிக்கல்!

## முகாம் பகுதியில் தொடர்ந்து சண்டை

யாழ்ப்பாணம், ஆக. 8

ஆனையிறவு முகாமை மீட்பதற்காக அங்கு அனுப்பப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆயிரக்கணக்கான துருப்புகளுக்கு உணவு வழங்குவதில் அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஆனையிறவு முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் தொடர்ந்து சண்டை இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் ஒரு நாளில் மட்டும் ஆனையிறவுப் பகுதியில் அரசுப் படையினர் மீது விடுதலைப் புலிகள் ஆச்சரியப்படத்தக்க முறையில் இரண்டு முறை தாக்குதல் நடத்தினர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

முகாமுக்கு இராணுவம் உணவு மற்றும் ஆயுதங்கள் கொண்டு செல்லும் பாதையைத் தடுக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அச்செய்தி தெரிவித்தது.

இதேசமயம்—

முகாமின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நேற்றும் மோதல்கள் இடம்பெற்றன.

விமானக் குண்டு வீச்சுகளும், கடும் ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-எ-15)

## 1,500 துருப்புகள் ஆனையிறவில் குவிப்பு?

ஆனையிறவு இராணுவ முகாமில் இருக்கும் படையினரின் எண்ணிக்கையை ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரை அதிகரிக்க இட்டமிடப்பட்டிருப்பதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகவலை அரசு சார்பு டெய்லி நியூஸ் பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கிறது.

ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் மேலும் தாக்கப்படுவதைத் தடுக்கு முகமாகவே படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## வடக்கிற்கு பொருள்களை அனுப்ப லஞ்சம் வாங்கிய 8 படையினர் இப்போது விளக்கமறியலில்!

கொழும்பு, ஆக. 8

தடைசெய்யப்பட்ட பொருள்களை லஞ்சம் வாங்கிக் கொண்டு வடபகுதிககு அனுப்ப உதவியதாகக் கூறப்படும் எட்டு இராணுவத்தினரையும் விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு நீதிவான் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

ஆறு வர்த்தகர்களிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்க உதவியதாக இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

எரிபொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிப் பத்திரம் வழங்கி உதவியதாகக் கூறப்படும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுராதபுரம் கிளையின் உயரதிகாரி ஒருவரும் விளக்க

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் கைதாகவில்லை!

கொழும்பு, ஆக. 8

தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்து செல்ல லஞ்சம் வாங்கிக் கொண்டு உதவியதாகக் கூறப்படும் இராணுவ பிரிகேடியர் கொழும்பில் தற்போது தங்கியுள்ளார். அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

அனுராதபுரம் இராணுவப் பிரிவில் இந்த பிரிகேடியர் முன்னர் பணிபுரிந்து வந்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

வடக்கு-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவது சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் திகதியை ஜனாதிபதி பிரேமதாஸா மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார்.

முன்னர் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் படி—

இம்மாதம் 22 ஆம் திகதி இச்சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக இருந்தது.

தற்போது 24. 2. 1992 இல் இந்த சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா தனது புதிய உத்தரவில் தெரிவித்திருக்கிறார். (உ-எ)

## ஈழ அகதி முகாம்களுக்கு ஸ்ரீலங்கா அதிகாரி விஜயம்

### இந்தியா அனுமதித்துள்ளதாம்!

கொழும்பு, ஆக. 8

இந்தியாவில் உள்ள ஈழ அகதி முகாம்களுக்கு ஸ்ரீலங்கா அரசு அதிகாரிகள் விஜயம் செய்து பார்வையிட இந்திய அரசு ஒப்புக்கொண்டிருப்பதாக தெரியவருகிறது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

புதுடில்லியில் இந்திய, ஸ்ரீலங்கா வெளியுறவு அ[illegible]சர்கள் மட்டத்தில் ந[illegible] பேச்சுவார்த்தையின்போது

[2 ஆம் பக்கம் பார்க்க]

## குப்பிளானில் ஷெல் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 8

பலாலி முகாமிலிருந்து நேற்று மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை குப்பிளான் பகுதியை நேர்க்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் பல வீடுகள் சேதமடைந்ததாகத் தெரியவருகிறது. [உ-15]

## குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 8

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் குடும்பஸ்தர் ஒருவரை ஏறாவூர் ஊர்காவல் படையினர் சுட்டுக் கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை சின்னத்தம்பி [50 வயது - தலவாயில்] என்பவரே இறந்தவர் ஆவார். (ஒ)

## முல்லைத்தீவில் அதிகாரியும் பலி

கொழும்பு, ஆக. 8

முல்லைத்தீவில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 8 படையினரில் ஒரு [illegible] இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-எ)

## கம்போடியாவின் கமரூஜ் போராளிகளுடன் புலிகளுக்கு தொடர்பாம்!

லண்டன், ஆக. 8

விடுதலைப் புலிகளுக்கும் கம்போடியாவின் கமரூஜ் போராளிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கக்கூடும் என்று தாய்லாந்து பொலீஸார் தெரிவித்துள்ளதாக "த பார் ஈஸ்ட்டன் எக்கனமிக் ரிவ்யூ" (The Far Eastern Economic Riview) என்ற சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவர் தாய்லாந்து—கம்போடிய எல்லையில் நடமாடி வருவதாகவும் தாய்லாந்துப் பொலீஸார் தெரிவித்துள்ளனராம்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தப் புலித்தலைவரின் பெயரை வெளியிட பொலீஸார், மறுத்து விட்டனர் என்றும், அவர் ஆயுதங்கள் வாங்கவே அங்கு வந்திருக்கலாம் என்றும் அச்சஞ்சிகை மேலும் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் வியட்நாம் ஆதரவு நொம்பென் அரசுக்கு எதிரான விடுதலை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திருச்சி சமயபுரத்தில் வெடிமருந்துகள் மீட்பு!

திருச்சி மாவட்டம்— சமயபுரம் பகுதியில் பெருந்தொகையான வெடிமருந்து பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருள்களும் கடந்த செவ்வாய்க்கிழமை பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

மருத்துவ ஆய்வக பணியாளர் ஒருவரின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட அப்பொருள்களில் ஒருவான், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களும் அடங்கியிருந்தன என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கைதான ஹோமியோபதி வைத்தியர் ஒருவரின் வீட்டில் இருந்து பெருந்தொகையான கைக் குண்டுகள் உட்பட, ஆயுதங்கள் மற்றும் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்பது தெரிந்ததே.

அதனை அடுத்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து சமயபுரம் முற்றுகை இடம் பெற்று, ஆய்வக பணியாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சமயபுரத்தை அடுத்துள்ள வேறு மூன்று கிராமங்களிலும் பொலீஸார் தேடுதல் நடத்தினர். [த-எ]

## ★ திருகோணமலையில் அரசு விரும்பாதவர்கள் குடியேறுவதற்குத் தடை!

கொழும்பு, ஆக. 8

1987க்குப் பின்னர் திருகோணமலைக்குத் திரும்பி அங்கு குடியமர்ந்தவர்கள் அவர்களின் அடையாளங்களை நிரூபிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலீஸார் பகிரங்கமாக அறிவித்தல் ஒன்றை விடுத்திருக்கின்றனர்.

விரும்பத்தகாதவர்கள் குடியிருப்பதை தவிர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம்.
[சி-0333]

### தவறிவிட்டது

பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று [Lotus] ஸ்ரேசன் வீதிக்கும், சின்னக்கடை சந்தைக்கும் இடையில் 4 - 8 - 91 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 38, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [17754]

### கண்காட்சி

அனித்தா பயிற்சி நிலையம் நடத்தும் மனையியல் கண்காட்சி இம்மாதம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறும். கேக் ஐஸிங், சிற்றுண்டி தயாரிப்பு, சிகையலங்காரம், கைவினை, தையல்வேலை, பூநாரிமரத்தடி, கொக்குவில். [17727]

## இடைநிறுத்தம்

கொழும்பு, ஆக. 8

எயர்லங்கா நிறுவனத்தில் பணிபுரியும் விமானமோட்டிகளில் ஆறுபேர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான காரணங்களை வெளியிட எயர்லங்கா அதிகாரிகள் மறுத்து விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## லஞ்சம்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆறு வர்த்தகர்களில் நால்வர் முஸ்லிம்கள், 2 பேர் சிங்களவர்கள் ஆவர்.

வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை அனுராதபுரத்தில் வைத்து சோதனையிட்ட போதுதான் அந்த லஞ்ச மோசடி அம்பலமானதாம்!

அந்த லொறியில் சிப்பாய் ஒருவரும் இருந்தாராம். அந்தச் சிப்பாய் தனது இராணுவ அடையாள அட்டையைக் காட்டிய போது அவர் ஒரு போலிச் சிப்பாய் என முதலில் பொலீஸார் சந்தேகித்தனர்.

அந்த நபர் பற்றி இராணுவத் தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது, அப்போது அவர் உண்மையான சிப்பாய் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்தே மோசடி அம்பலமானது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## ஈழ அகதி...,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
இத்திருப்பம் ஏற்பட்டதாகவும் அப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

முன்னர் ஒரு கட்டத்தில் சென்னையிலுள்ள ஸ்ரீலங்கா துணைத் தூதர், தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதி முகாம்களுக்குச் சென்று பார்வையிட புதுடில்லி அரசு அனுமதி அளிக்க மறுத்திருந்தமை தெரிந்ததே.


எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கானா நாட்டின் தலைநகர் அக்ராவில் அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு நடைபெறவிருக்கின்றது.

அம்மாநாட்டில் கலந்து கொள்ளச்செல்லும் ஸ்ரீலங்கா மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர்கள் அங்கு வைத்து இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் விஷயம் உட்பட ஏனைய இரு தரப்பு விஷயங்கள் குறித்து மீண்டும் பேச்சுகள் நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 18 — 07 — 1950



ஆண்டவன் மடியில்: 08 — 08 — 1990

### அமரர் பொன். சிவராஜா M. A.

(முன்னாள் பரி. யோவான் கல்லூரி ஆசிரியர்)

அன்பால் இணைந்து பாசத்தால் கட்டுண்ட
அன்பான பாலகரையும், என்னையும்
பார்க்கப் பொறாத பரமன்
பாதி வழியில் பறித்துச் சென்றானே!
முதுமாணிப் பட்டம் பெற்றாய் முடிவில்லா-
உயர்வும் பெற்றாய்
முடிவுறாது உன் புகழ் வளரும் உன்-
மூச் செல்வங்களாலே
ஓராண்டென்ன ஓராயிரம் யுகங்கள் சென்றாலும்
ஒளி வீசி புகழ் வீசும் உன் நாமம் என்றும்
எம்மனம் விட்டகலாது.

பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, மக்கள்.**

69, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம். (17752)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன். சிவராஜா

[ஆசிரியர் யாழ். பரியோவான் கல்லூரி]

தோற்றம்: 18 - 07 - 1950 மறைவு: 08 - 08 - 1990

வர்த்தகத்தில் வித்தகனாய் வந்தமர்ந்தாய்-
எம்மகத்தில்
வகுப்பறையில் பலகலைகள் பரிசமுடன் -
பயிற்றுவித்தாய்
சத்தமுடன் ''அசம்பிளி'' யில் சத்தமுடன் பல-
கருத்தை
சத்தாகத் தந்தெம்மை தெம்பாக்கி வைத்திருப்பாய்
மாணவரின் நலனொன்றே மார்க்கமெனக் கல்விக்கு
மாசற்ற நன்னெறியை விதியாக்கி வாழ்ந்தாயே
ஆசிரியத்தத்துவத்தில் முதுகலையில் தேர்ச்சி பெற்று
ஆற்றொழுங்காய் எம்மவரை வழிப்படுத்த -
வேண்டுமென
பல்கலைக்கு சென்றாயே, பார்த்திருந்தோம்-
காத்திருந்தோம்
பாவிகளின் குண்டுக்கு பலியான விதி கேட்டு
ஆசானே சற்குருவே அதிர்ந்திட்டோம்!
அதிர்ந்திட்டோம்.
உன் ஆத்மா சாந்தி பெற உற்றவர்கள் அமைதியுற
அஞ்சலியில் இணைகின்றோம்! அஞ்சலியில் -
இணைகின்றோம்!!

**வர்த்தக மாணவர் ஒன்றியம்,**
**யாழ். பரியோவான் கல்லூரி.**

[17755]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன். சிவராஜா

தோற்றம்: 18 - 07 - 1950 மறைவு: 08 - 08 - 1990

எங்கும் போர் முழக்கம், எழுக எழுகவென
எங்கள் தமிழ் ஈழம், மலரும் மலருமென
பொங்கும் தமிழ் உணர்வு, பொருது பொருதுவென
பொய்மை விலங்குகள், உடையும் உடையுமென
தங்கு தடையின்றித், தமிழர் அணி சேர்ந்து
தடைகள் உடைத்தெறியத் தாவிக்கள நோக்கும்...
இந்த வேளையிலும், உன் நினைவு
மாங்குயிலின் கீதமாக ...... மனதை வருடும் ......
வீணையின் நாதமாய் ......
எத்தனை இழப்புக்கள் இந்த மண்ணில்
எண்ணும்போது ... நண்பர்
முதல் தானம் நீயே
உன் இழப்பால் உயிரழியும், உள்ளகத்தாள்
உன் உயிர்கள், உன்னவர்கள், நண்பர்கள்
அனைவர்க்கும்
இத் தினத்தில் சாந்தி ... சாந்தி...

உன் நண்பர்கள்.

[17756]

---

### கோண்டாவில் மேற்கு

கந்தர்வளவு
ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோவில்
(காளிகோவில்)


கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் நித்திய பூசைகளுக்கும், குருத்துவம் செய்வதற்கும் உடனடியாக ஒரு பூசகர் தேவைப்படுகின்றார். விரும்புவோர் ஆலய பரிபாலன சபையின் தலைவர் அல்லது செயலாளருடன் நேரில் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்.
(ஆலய பரிபாலன சபை)

கோண்டாவில். [4232]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கனகசபை பற்குணராசா

[கணக்காளர், தபால் திணைக்களம், மட்டக்களப்பு]

தோற்றம்: 22 - 12 - 1948 மறைவு: 30 - 07 - 1989

திதி: 08 — 08 — 1991

தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவுடன் வாழும்:
**மனைவி, மக்கள், உறவினர்கள்.**

அரியாலை. [17748]

---

## 1 ஆம் வருட நினைவஞ்சலி



### அருமநாயகம் எட்வேட் பிரசன்னா

(பரியோவான் கல்லூரி, ஆண்டு 5 மாணவன்)

தோற்றம்: 08 - 07 - 1979 மறைவு: 08 - 08 - 1990

பிரசன்னா நீ! இறைபிரசன்னத்தில் இருக்கின்றாய் என்ற மன நிறைவுடன் உன் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அப்பா, அம்மா, தம்பி, தங்கை.**

7, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4231)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொண்டா முயற்சிக்கட்டும்

அமைச்சர் தொண்டமான், கொழும்பு "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி வட பகுதியில் மட்டுமன்றி, தென்னிலங்கையிலும் பல வாசகர்களின் கவனத்தை ஈர்ந்திருக்கும்.

திரு. தொண்டமான் தமது பேட்டியில் வலியுறுத்தி இருக்கும் கருத்துகள், தென்னிலங்கை மக்களாலேயே அதிகமாக ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியவை. குறிப்பாக அப்பகுதி அரசியல்வாதிகளினதும், விசேடமாக அரசாங்கத் தரப்பினரினதும் சிந்தனையைத் தூண்ட வேண்டியவை.

இராணுவத் தீர்வு ஒன்றை நாடி நிற்கும் அரசாங்கத்துக்கு, இராணுவ மேலாதிக்க நிலையை எய்திய பின் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்குத் திட்டமிட்டிருக்கும் அரசாங்கத் தரப்பினருக்கு, திரு. தொண்டமான் யதார்த்த நிலையைப் புரிய வைத்திருக்கிறார்.

அதாவது, அரசாங்கம் இராணுவ மேலாதிக்க நிலையை எய்துவது மிகக் கடினமானது. விடுதலைப் புலிகள் தங்களால் படையினரைத் தாக்குப்பிடிக்க முடியும் என்று கடந்த ஒரு வருட காலமாக நிரூபித்துக் காட்டி விட்டார்கள். அவர்கள் அரசாங்கப் படைகளைப் போலவே மரபுவழிப் படையாகி விட்டார்கள். எனவே அவர்களை ஒடுக்குவதோ அல்லது இராணுவ மேலாதிக்க நிலையை எட்டிப் பிடிப்பதோ அரசாங்கப் படை உயர் அதிகாரிகள் எண்ணுவது போல இலகுவானதல்ல என்ற உண்மை நிலையை - யதார்த்த நிலையைத் தொண்டமான் பச்சையாகவே சொல்லி இருக்கிறார்.

அடுத்து, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, "ஈழம்" கொள்கையில் உள்ள அர்த்தம் பொதிந்த ஒரு தீர்வுதான் இனி முன்வைக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாகிவிட்டது என்பதையும் அவர் விளங்க வைக்க முயற்சித்திருக்கிறார். "ஈழம்" என்றதுமே "அலர்ஜி" அடையும் அரச தரப்பினர் திரு. தொண்டமான் கூறுவதை சீரணிப்பார்களா என்பது சந்தேகம் தான்.

இலங்கை - இந்திய ஒப்பந்த (மாகாண சபை) அடிப்படையில் அல்லது அதற்குச் சில திருத்தங்களைச் செய்யும் விதத்தில் இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வை வகுக்கலாம் என்று நினைக்கக் கூடாது.

அந்த ஒப்பந்தத்துக்கும் அப்பால், ஈழத்துக்கு நெருங்கிய ஒரு தீர்வே முன்வைக்கப்பட வேண்டும் என்று தாம் அங்கம் வகிக்கும் அரசாங்கத்துக்கு வெளிப்படையாகப் புத்திமதி சொல்லியிருக்கிறார்!

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால், எதிர்ப்பு இருக்கிறது என்று கூறிக்கொண்டு, அரசியல் தலைவர்கள் அந்தப் போர்வைக்குள் மறைந்து கொள்ளக்கூடாது. நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு தலைவர் அதனை வழி நடத்தவேண்டும்—என்று தலைவர் என்பவருக்கு உரிய வரைவிலக்கணத்தையும் எடுத்துக் கூறி உள்ளார்.

அமைச்சர் தொண்டமான் கூறும் யதார்த்த நிலைகள், ஆலோசனைகள், புத்திமதிகள் சிறந்தவை, பயன் விளைக்க வல்லவை தான். ஆனால் அவர் கூறுவதை அரசாங்கத் தரப்பினர் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிக்க முன்வருவார்களா என்பது தான் கேள்வி!

அடி மேல் அடி அடிக்க அம்மியும் நகரும். ஆகையால் பத்திரிகைக்குக் கூறியவற்றை திரு. தொண்டமான் தமது அமைச்சரவைச் சகபாடிகளுக்கு நேரில் விளக்கி வெற்றி கண்டால் நன்மையே. அதனை அவர் செய்ய முயல்வாராக!

# ஆனையிறவின் வடபகுதியில் பாதுகாப்பு வலயமாம்!

ஆனையிறவு முகாமின் வடபகுதியில் பாதுகாப்பு வலயம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அது வெற்றிலைக்கேணி வரை விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புப் படை வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனையிறவு முகாமின் மேற்குப் பகுதியில் ஒரு கிலோமீற்றர் வரை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்றும் அப்பத்திரிகைச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-எ]

## ஈழ அகதிகள் வெளியேற்றம்:

# சர்வதேச கோட்பாடுகளை டில்லி கடைப்பிடிக்குமாம்

இந்தியாவில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் விஷயத்தில், அது சம்பந்தமான சர்வதேச கோட்பாடுகளை புதுடில்லி அரசு கடைப்பிடிக்கும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் இத்தகவலை நேற்று ராஜ்ய சபையில் வெளியிட்டார்.

சபையில் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைக்கு பதிலளிக்கையில் இணை அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (ஓ-எ)

# புத்தாண்டு அழகுராணியை கொன்ற பொலீஸ் அதிகாரி

கொழும்பு, ஆக. 8

புத்தாண்டு அழகுராணி ஒருவரைக் கொலை செய்ததாக தென்பகுதி பொலீஸ் அதிகாரி ஒருவர் மீது குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

இச்சம்பவம் தொடர்பான இரகசியப் பொலீஸாரின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்ட பொலீஸ் அதிகாரி மீது வழக்குத் தாக்கல் செய்யும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

தடைசெய்யப்பட்ட ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறி அந்தப் பெண்ணை, அந்தப் பொலீஸ் அதிகாரி காட்டுக்குக் கூட்டிச் சென்று அங்கு வைத்து சுட்டுக்கொன்றாராம்.

பெண்ணின் சடலத்தை அந்த பொலீஸ் அதிகாரி பின்னர் டீஸல் ஊற்றி, டயர்களை அதன் மேல் போட்டு எரித்தாராம்.

அச்சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் ரிசர்வ்பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் வர்க்குமூலத்தைத் தொடர்ந்தே, இவ்விஷயம் அம்பலமானது.

எரிந்த சடலம், புதுவருட அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

அந்தப் பெண்ணுக்கும் சந்தேக நபரான பொலீஸ் அதிகாரிக்கும் முன்னர் காதல் தொடர்பு இருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. (த-எ)

# வட இலங்கை சங்கீதசபைக்கு இன்று 60 வயது பூர்த்தி

வட இலங்கை சங்கீத சபை, ஈழத்தமிழரின் கலை, கலாசாரத்தில் ஊன்றிப்பதிக்கப்பட்ட காலத்தால் அழியாத சுவடு. 1931 ஆம் ஆண்டு தொடக்கம் நல்ல பல கலைஞர்களை உருவாக்கிவரும் நீரூற்று.

சங்கீதம், பரதம், கதகளி, பண்ணிசை, மிருதங்கம், நாடகமும், அரங்கியலும் போன்ற துறைகளில் வருடா வருடம் சபையினால் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இச்சபையினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் ஈழத்தில் மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் மதிக்கப்பட்டு, அதனைப் பெற்றவர்கள் தமது திறமையினால் கலைத்துறையில் மிளிர்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வட இலங்கைச் சங்கீத சபை ஒரு பரீட்சை நடத்தும் சபையாக மட்டும் இயங்காது, மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையோடு, 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் தரத்தில் திறமையோடு சித்தியடைந்த சங்கீத, நடன, வயலின் கலைஞர்கள் ஆ றூபேரின் அரங்கேற்றங்களை, பெற்றோரின் ஆதரவுடன் நடத்தியது.

எனினும், [illegible] காணும் இவ்வேளையில், சமகால நிகழ்வுகளை [illegible]க்கொண்டு நாட்டுப்பற்று- விடுதலை வேட்கை- தமிழ் மொழிப் பற்று போன்ற எண்ணக் கருக்களை வெளிப்படுத்தும் கலையுணர்வு இச்சபை மூலம் போதியளவு வெளிக்காட்டப்படாமை கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் குறையைத் தீர்க்கும் விதத்தில் எதிர்காலத்தில் இசை, நடன, நாடக நிகழ்வுகளில் இவ்வெண்ணக் கருக்கள் முக்கிய பங்காற்ற வழி வகுக்கப்படுகின்றது.

ஒரு நாட்டில் மொழிப் பற்றை ஊட்டுவதற்கும், மண்ணை நேசிக்கும் மனப்பாங்கு - விடுதலை உணர்வு- போராட்டப் பங்களிப்பு போன்றவற்றுக்கு இசை, நடன, நாடகங்களே பொருத்தப்பாடான, வெற்றியளிக்கக்கூடிய சமூக மயப்படுத்தும் ஊடகங்களாக விளங்குகின்றன. எமது மண்ணில் இன்று தேவைப்படுவதும் கலையினூடாக ஒரு விழிப்புணர்வும், புத்தெழுச்சியும் தான். கலைஞர்களின் முற்றுமுழுதான பங்களிப்பின் மூலம் பாரிய சமுதாய மாற்றத்தையே உருவாக்க முடியும்.

எனவே வட இலங்கைச் சங்கீதசபை அறுபது ஆண்டுச் சேவையைப் பூர்த்திசெய்யும் இவ்வேளை, கலைஞர்கள் தனித்து மரபுகளைப் பேணுவதோடு மட்டுமல்லாது, யதார்த்தத்திற்கு வரவேண்டியது பெரும் வரலாற்றுத் தேவையாக இருக்கின்றது.

[வட இலங்கை சங்கீத சபையின் அறுபதாவது ஆண்டு பூர்த்தி இன்றாகும். [illegible] இங்கு பிரசுரமாகிறது.]

எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன்

## மாகாணசபை உறுப்பினர்

# எம். பியின் மனைவியை சுடப்போவதாக மிரட்டல்!

எம். பி. ஒருவரின் மனைவியை சுடப்போவதாக மாகாணசபை உறுப்பினர் ஒருவர் பயமுறுத்தினாராம்.

அந்த எம். பியின் மனைவி செய்து கொண்ட முறைப்பாடு குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாவட்டத் தேர்தல் தொகுதி ஒன்றின் பிரதம அமைப்பாளர் பதவியில் இருந்து அம்மாகாண சபை உறுப்பினர் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இப்பயமுறுத்தல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

## தமிழருக்குக் கூடுதல் அதிகாரம்:

# சு. க. ஏற்க வேண்டுமென சந்திரிகா ஆலோசனை

தமிழர்களுக்குக் கூடுதலான அதிகாரப் பரவலை வழங்குவதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும்-என்று திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளார்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்க சுதந்திரக் கட்சியுடன் இணைவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் சிங்களப் பேரினவாதக் கொள்கையை சுதந்திரக் கட்சி கைவிடவேண்டும் என்றும் திருமதி சந்திரிகா அக் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதே வேளை—இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று சுதந்திரக் கட்சி எம்.பி திரு.மங்களமுனசிங்க கொண்டு வரும் தனிநபர் பிரேரணையை ஆதரிப்பது என்று சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது.

இத் தனிநபர் பிரேரணையை ஆதரிக்கப் போவதாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே அறிவித்தது தெரிந்ததே. [அ-எ]

# கைதிகளின் கடிதத்தை ஏற்று விசாரிக்க அனுமதி!

## உயர்நீதிமன்றுக்கு பாராட்டு

கொழும்பு, ஆக. 8

தடுப்புக்காவல் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் சிலர் கூட்டாக எழுத்து மூலம் அனுப்பிய கடிதம் ஒன்றை அடிப்படை மனித உரிமை மீறலுக்கு எதிரான விண்ணப்பமாக கொழும்பு உயர்நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்து உள்ளது.

இந்தத் துணிச்சலான நடவடிக்கையை எடுத்ததற்காக உயர்நீதிமன்றத்தை மனித உரிமைகளைப் பேணும் சட்டத்தரணிகள் அமைப்பு பாராட்டியுள்ளது.

கைதிகள் அனுப்பிய விண்ணப்பம் அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதாக அமையவில்லை என்று கூறி அந்த விண்ணப்பத்தை உயர்நீதிமன்றம் நிராகரித்திருக்க முடியும் என்று மனித உரிமைகள் பேணும் சட்டத்தரணிகள் அமைப்பின் பொதுச் செயலாளர் ஆர.கே.டபிள்யூ. குணசேகரா கூறினார்.

# ஹெக்டே பதவியிழந்தார்!

பெங்களூர், ஆக. 8

கர்நாடக சட்டசபை உறுப்பினர் பதவியை திரு. ராமகிருஷ்ண ஹெக்டே இழந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

பெங்களூர் ராஜ்யபவனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

கர்நாடக முன்னாள் முதலமைச்சரான திரு. ஹெக்டே, 1989 ஆம் ஆண்டு டிசம்பரில் சட்ட சபைத் தேர்தல் நடத்த சமயம் திட்டக் கமிஷனின் உபதலைவராகப் பணிபுரிந்திருந்தார்.

அதன் காரணமாக திரு. ஹெக்டே சட்டசபை உறுப்பினராக பதவிவகிக்க தகுதியற்றவர் என்று உத்தரவிடும்படி கோரி இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. யான ஏ. கே. சுப்பையா கர்நாடக ஆளுநருக்கு விண்ணப்பித்திருந்தார். அந்த விண்ணப்பத்தை ஏற்று ஆளுநர் இந்த உத்தரவை வெளியிட்டிருக்கிறார்.

## ஜூன் மாதத்துக்கான ஒய்வூதிய வவுச்சர்

ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை உரியவர்களுக்கு தபால் மூலம்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதற்கான நிதி கொழும்பிலிருந்து யாழ்.செயலகத்திற்கு இன்னும் வந்து சேரவில்லையென இந்த திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த-100)

## யாருடையது?

மாகியப்பிட்டியைச் சேர்ந்த செல்வி சபாபதிப்பிள்ளை சரோஜினிதேவி என்பவர் தான்வீதியில் கண்டெடுத்த கைக்கடிகாரம் ஒன்றை உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

கைக்கடிகாரத்தின் உரிமையாளர் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அதனைப் பெற்றுக்கொள்ளலாம். (அ)

## நோயாளர்கள் வந்தனர்

கொழும்புக்கு அவசர சிகிச்சை பெறச் சென்றிருந்த 83 பேர் நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'குமண' கப்பலில் திரும்பினர்.

இந்தக் கப்பலில் யாழ். ஆஸ்பத்திரிக்குரிய ஒரு தொகை மருந்தும், குளோரின் மற்றும் எக்ஸ்ரே பிரிவுக்குரிய சில மருந்து வகைகளும் வந்து சேர்ந்தன. (ஓ-15)

## கமரூஜ்...

[1 ஆம பக்கத் தொடர்ச்சி]

இயக்கங்களுக்கு 1980 ஆம் ஆண்டு முதல் சீனா ஆயுதங்களை வழங்கி வருகிறது.

கம்போடிய யுத்தம் முடிவடையும் பட்சத்தில் இந்த ஆயுதங்கள் கள்ளச் சந்தையில் விற்பனையாகலாம் என்று தாய்லாந்து புலனாய்வுப் பகுதியினர் அச்சம் தெரிவிக்கின்றனர்

இப்படி அந்த சஞ்சிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் மீண்டும் ஜனநாயக ஆட்சி முறை

பங்களாதேஷில் மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை கொண்டு வரப்படவுள்ளது.

இதற்கு ஏதுவாக அரசமைப்பைத் திருத்தும் 12 ஆவது திருத்தத்தை பங்களாதேஷ் நாடாளுமன்றம் நேற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரித்தது.

இத்திருத்தம் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்பட இருக்கிறது. [த-எ]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| படைப்பவன் அளிப்பு: | பாதகர் அழிப்பு: |
|---|---|
| 18 | 08 |
| — | — |
| 07 | 08 |
| — | — |
| 1956 | 1989 |

அமரர்

### பொன்னையா நவரட்ணம்

(பாலு)

[கிருஷ்ணா லொறி உரிமையாளர்]

அன்னமிட்ட உன் கரங்களை அன்னியனின்
சன்னங்கள் துளைத்தன
அன்பு கொண்ட எம் இதயங்கள்
ஆறாத் துயரத்தில் மிதந்தன
நீ நடந்த பாதச் சுவடுகளில்
என்றும் உன் உருவைக் காண்கின்றோம்
உன்னை அழித்தவர் ஓடி ஒழிந்தனர்
உந்தன் பணி நிதம் தொடர்வோம்.

எம் அன்புச் செல்வமே! உம் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

வேம்போடுகேணி,
பளை. [17749]

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### தர்மலிங்கம் ஜெகதாஸ் (ஜெகன்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 26 - 12 - 1960 | 11 - 08 - 1988 |

மூன்றாண்டு சென்றிட்டாலும்
மூழ்கிடுமோ முழு நிலவு
காலை விடியுமுன்பு
கதிரவன் மறைந்திட்டானோ
வாழ்ந்திடுவாய் வானகத்தில்
வணங்குகின்றோம் உன் காலடியை.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

சின்னத்தங்கம் தர்மலிங்கம்
குடும்பத்தினர்.

வீரபத்திரர் கோவிலடி,
வட அல்லவை. [17702]

## கொக்குவில் இந்து மாணவருக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஆக. 8

வைத்திய சேவைக்காக தமது பெயர்களைப் பதிவு செய்து சேவையாற்றிய, சேவையாற்றாத கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவ, மாணவியர்களை நாளை காலை 9.30 மணியளவில் கல்லூரியில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

முக்கிய விடயங்கள் ஆராயப்படவேண்டியுள்ளதால் பெற்றோர்களையும் சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (உ-3)

## தனியார் கல்வி நிலைய கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களின் இயக்குனர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் விசேட பொதுக்கூட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போர்ச் சூழலிலே தனியார் கல்வி நிலையங்களின் பங்கு, தனியார் கல்வி நிலையங்களை மீண்டும் ஆரம்பித்தல் உட்பட பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளன.

## "தமிழீழம்" இன்று வெளிவரும்

யாழ்ப்பாணம், ஆக. 8

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சஞ்சிகையான தமிழீழம் இதழின் ஜூலை — ஆகஸ்ட் மாத வெளியீடு இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் பெண் விடுதலை பற்றிய கருத்துகள் அடங்கிய பல கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## கரை ஒதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், ஆக. 8

யாழ்ப்பாணம் பண்ணைக் கடலில் ஒதுங்கியதாகக் கூறப்படும் சுமார் 60 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் அப்பகுதி மக்களால் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் வெள்ளை வேட்டி அணிந்திருந்தார். சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

## மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 8

ஆனையிறவில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த போராளிகள் இருவரின் புகழுடல்கள் நேற்று யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

புகழுடல்கள் பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

பூர்ணிமா [வசந்தி பேரம்பலம் — கொழும்புத்துறை], வாசு [பொன்னுத்துரை இந்திரகாசன் — வண்ணார்பண்ணை] ஆகியோரே வீர மரணம் அடைந்தவர்கள் ஆவர். [ஓ-3]

## இந்திய ஏவுகணை

பெங்களூர், ஆக. 8

தரையில் இருந்து விண்ணோக்கிச் செல்லும் பிரித்வி—3 ஏவுகணை நேற்று பெங்களூர் ஸ்ரீ ஹரிகோட்டா தளத்தில் இருந்து வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

இச் சாதனையினால், இந்தத் திறனுடைய ஐந்து வல்லரசு நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்து கொண்டது. [ஓ-எ]

## ஓராண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | மண்ணின் மடியில்: |
|---|---|
| 26 | 08 |
| — | — |
| 07 | 08 |
| — | — |
| 1966 | 1990 |

### சுப்பிரமணியம் தயாளன்

எமதனைவருக்கும் நண்பனாய்
எப்போதும் துடி துடிப்பாய்
எல்லோருக்கும் உதவுவதற்காய்
எந்நேரமும் ஓடியோடி உழைத்திட
தயங்காத தயாளனே!
தாளாது வேகின்றோம்
தனித்துவிட்டோம் ஓராண்டு
நீங்காது உன் நினைவு
உனது நண்பர் மனங்களிலே!

- உதயன் ஊழியர்கள்.

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் மடியில்: |
|---|---|
| 29 | 08 |
| — | — |
| 10 | 08 |
| — | — |
| 1957 | 1990 |

### பேட்டி அன்ரன் எதிர்வீரசிங்கி B. Sc.

[முன்னாள் ஆசிரியர், யாழ். சுதுமலை சிம்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்]

சினச் சகடையால் சிதைந்தாலும் உன் மேனி
சிரித்த முகத்தோடெம் சிந்தையிலே இருக்குதையா
ஆண்டவன் அடி சென்று ஆண்டொன்று -
சென்றதுவோ
ஆண்டு பல சென்றாலும் ஆறாதே எங்கள் துயர்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (08 - 08 - 1991) வியாழக்கிழமை பகல் 11 - 00 மணிக்கு யாழ். புனித அடைக்கலமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உறவினர்கள், அன்பர்கள் தயை கூர்ந்து இத்திருப்பலியில் பங்கு கொண்டு, அதன் பின் இல்லத்திற்கு வருகை தருமாறு அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறுபவர்கள்:
மனைவி, மகன், பேர்த்தி, தாய்,
தந்தை, சகோதர, சகோதரிகள்.

390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [17753]

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாமுத்து இராசம்மா

மூளாய் றோட், வட்டுக்கோட்டையில் வசித்து வந்த திருமதி ஐயாமுத்து இராசம்மா காலமானார்.

ஈமக்கிரியைகள் 8-8-91 வியாழக்கிழமை காலை 9-00 மணியளவில் சித்தன்கேணியில் Dr. தம்பையா அப்பாதுரையின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாற்று மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. த. அப்பாதுரை

சித்தன்கேணி. [4234]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org